IN THE COURT OF SUBORDINATE JUDGE, ERANIEL.
O.S. No.46/2023
Deposition of Witness for PW1.

Name : திரு.டிக்சன் ஜினோ
Father Name :
Age :
Calling :
Village :
Taluk :
District :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 02.06.2025.

சத்தியபிரமாணத்தின் பேரில் சாட்சியமளிக்கிறார்.

முதல் விசாரணை

நான் இவ்வழக்கில் வாதி. எனது முதல் விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து தான். அதில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளை நான் தான் வழக்கறிஞருக்கு கூறினேன். 05.02.1962 தேதியிட்ட ரஞ்சிதம் பெயரிலான கிரைய ஆவணத்தின் இணையதள நகல் வா.சா.ஆ–1, 05.07.1994 தேதியிட்ட செல்லநாடார் எழுதிய உயில் பத்திரம் அசல் வா.சா.ஆ.2, 19.12.2011 தேதியிட்ட எனது பெயரில் உள்ள எனது தாயார் கிறிஸ்டிபாய் மற்றும் எனது சகோதரன் காட்சன் ஜெபா மற்றும் விக்டர் ராஜ் ஆகியோர் எழுதிக்கொடுத்த விடுதலை பத்திரம் இணையதள நகல் வா.சா.ஆ–3, 18.10.2022 தேதியிட்ட பிரதிவாதிகள் எழுதிய பாகபிரிவினை பத்திரம் இணையதள நகல் வா.சா.ஆ–4, 25.11.2022 தேதியிட்ட மாவட்ட ஆட்சியர் வழங்கிய மேல்எழுத்துக்கடிதம் ஒளிநகல் வா.சா.ஆ–5, 21.11.2022 தேதியிட்ட நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் ஒளிநகல் வா.சா.ஆ–6, 12.12.2022 தேதியிட்ட காவல் துறை அதற்கு வழங்கப்பட்ட ரசீது வா.சா.ஆ 7, 24.02.2020 தேதியிட்ட வழக்கு பட்டிகை சொத்திற்கான நிலவரி ரசீது வா.சா.ஆ–8, 04.02.2020 தேதியிட்ட எனது பெயரில் உள்ள பட்டா வா.சா.ஆ–9, 05.04.2023 தேதியிட்ட குளச்சல் காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகார் மனு ஒளிநகல் வா.சா.ஆ–10, அதற்கு காவல் நிலையத்தில் கொடுத்த 05.04.2023

தேதியிட்ட ரசீது வா.சா.ஆ–11, வழக்கு பட்டிகை சொத்திற்கான வழிகாட்டி மதிப்பு சான்று வா.சா.ஆ 12.

பிராதுபடி தீர்ப்பாக வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.